இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 07 திகதி: 07.05.2017 விலை : 20.00

## யாழ். மறைமாவட்டத்தின் முதலாவது இறை இரக்க ஆலயத் திறப்புவிழா



யாழ். மறை மாவட்டத்தில் அமைந்துள்ள முதலாவது இறை இரக்க ஆலயமானது கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரப் பங்கில் பிரமந் தனாறுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இவ் ஆலயம் 1992ல் அருட்பணி பெனற் அடிகளாரின் சிறிய கொட்டகை யில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நிரந்தர ஆலயத்திற்கான அடிக்கல்லா னது அருட்பணி தே. ரவிராஜ் அடி களாரினால் 10.03.2016 இல் நாட்டப்பட்டு இன்று 25 வருடங் களைக் கடந்த நிலையில் இந் நாள் அருட்தந்தை அ.அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரால் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு புதுப்பொலிவு டன் கம்பீரமாகக் காட்சியளித்து நிற்பது மனதிற்கு நிறைவைத் தருகின்றது.

இவ் ஆலயத் திறப்பு விழா வானது இறை இரக்கத் திருவிழா வன்று நடைபெற்றது மிகவும் சிறப்பிற் குரிய விடயமாகும்.

இந்நிகழ்வானது 23.04.2017 அன்று காலை 7.30 மணியளவில் யாழ் ஆயர் பேரருட் திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. ஆயர் அவர்கள் தனது மறை உரையில் அனத்து இறை மக்களும் இரக்கத்தின் கருவிகளாக செயற்பட வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்விலே ஏராளமான அருட்தந்தையர்களும், அருட் சகோதரி களும், பல மறை மாவட்டங்களிலிருந் தும் வருகை தந்திருந்த 5000 இற் கும் அதிகமான இறை இரக்கப் பக்தர்க ளும் கலந்துகொண்டு சிறப்பித்து இறை இரக்க ஆண்டவரின் அருளையும் ஆசியையும் பெற்றுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## தொடர்புத்துறையை பாராட்டிய திருத்தந்தை

திருப்பீடத்தின் தொடர்புத்துறை, இரக்கத்தின் நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்வதற்கு, புதிய வழிகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருப் பதைத் தான் பாராட்டுவதாக, திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், வழங்கிய ஓர் உரையில் குறிப் பிட்டார்.

திருப்பீடத்தில் தனித்தனியே இயங்கி வந்த வானொலி,'தொலை காட்சி, செய்தித்தாள், வலைத்தளம் என்ற அனைத்து தொடர்புத்துறைப் பிரிவுகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள திருப்பீடத் தொடர்புத் துறை, வருகிற ஜூன் மாதம் தன் இரண்டாம் ஆண்டை நிறைவு செய்யும் என்பதையும் திருத்தந்தை தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

## மற்றவர்களுக்காக நாங்கள் துன்பப்படும் பொழுது உயிர்த்த இயேசுவை அனுபவிக்கின்றோம்

### யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர்

இளவாலை புனித நீற்றாள் ஆலயத் திருவிழாத் திருப்பலியை நிறை வேற்றி மறையுரை வழங்கிய யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி கலாநிதி. ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் மேற்கண்டவாறு எடுத்துரைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இப் பாஸ்காக் காலத்தில் நற்செய்திகள் ஊடாக பலர் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்து அவரிடம் பெற்ற அனுபவத்தைப் படிக்கின்றோம். இவ்வாறு நற்செய்திகளில் மட்டுமன்று அதற்குப் பின்னும் பல்லாயிரக்கணக்கானோர் உயிர்த்த இயேசுவின் அனுபவத்தைப் பெற்றுள்ளனர் என்பதை நாம் வரலாற்றில் காண்கின்றோம். (தொடர்ச்சி 08ம் பக்கம்)

## மறை மாவட்டத்தின் மூத்த குரு அருட்திரு நீக்லஸ் குணசீலன் அடிகள் காலமானார்



யாழ். மாவட்டத்தின் மூத்த குரு நீக்லஸ் குணசீலன் அடிகள் தமது 88 ஆவது வயதில் காலமானார். 1931 ஆம் ஆண்டு பிறந்த அடிகளார் 1958 ஆம் ஆண்டில் இறைபணியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அமரர் குணசீலன் அடிகள் யாழ். மன்னார் மறை மாவட்டங்களில் பல்வேறு பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணியாற்றியுள்ளார் குறிப்பாக வங்காலை, கரம்பன், இளவாலைப் பங்குகளில் நீண்டகாலம் பங்குத்தந்தையாகப் பணியாற்றியுள்ளார். சிறப்பாக சிறிய குருமட அதிபராகவும், கண்டி தேசிய குருமட விரிவுரையாளராகவும் குடும்பவள நிலைய இயக்கு நராகவும் பணியாற்றியுள்ளார்.

ஓய்வு காலத்தில் குருக்கள், குருமட மாணவர்களுக்கு பச்சாத்தாப அருட்சாதனங்களை வழங்கியும் ஆன்மீக வழிகாட்டியாகவும் பணிபுரிந்தார். அடிகளாரின் இறுதி ஆராதனைகளை யாழ். ஆயர் பேரருட் திரு.கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 27.04.2027 அன்று நடாத்தினார். மறைந்த அமரர் அருட்பணி குணசீலன் அடிகளாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற பாதுகாவலன் அஞ்சலித்து நிற்கின்றது.

## பாஸ்கா விழாச் செய்தி - 2017

### *இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் மன்றம்*

இவ்வருடம் எம் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையானது எம் மத்தியில் இயேசுக் கிறிஸ்துவை மீண் டும் கொண்டு வந்த எம் நாட்டின் புனிதர் யோசேவ் வாஸ் அடிகளாரை நோக்கி எம் பார்வைகளைத் திருப்பியுள்ள வேளையில் நாம் இப் பாஸ்கா விழா வைக் கொண்டாடுகின்றோம்.

எமது விசுவாசத்தைப் புதுப் பிக்கின்ற இப்பாஸ்காக் காலத்தில் விசு வாசம் என்னும் கொடையை எம் மத்தியில் பற்றி எரியச் செய்த புனித யோசேவ் வாஸ் அடிகளாரின் ஒப்பற்ற பணி எமக்குள் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது அதே வேளை, இக்காலமானது குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகிய நாம் எமது பணி அர்ப் பணத்தை இலங்கையின் அப்போஸ் தலரான புனித யோசவ் வாஸின் பாதச்சுவடுகளில் மீள அர்ப்பணிக்க தேவையான நேரமாக அமைகின்றது.

உயிர்த்த யேசு தம் சீடர்க ளுக்குத் தோன்றி, சமாதானத்தை அவர்களுக்குக் கொடையாக அளித் தார். (தொடர்ச்சி 08ம் பக்கம்)

## இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் வெசாக் திருநாள் வாழ்த்துச் செய்தி

உலகெங்கும் வாழும் பௌத்தர்களுக்கு மிக முக்கியமான நாளே வெசாக் திருநாளாகும். இத்திருநாள் கொண்டாடப்படும் இந்நன்நாளில் எம் நாட்டின் அனைத்து பௌத்த சகோதர சகோதரிகளுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தேரவாதம் செழித்தோங்குகின்றதும், நான்கு சமயங்களும் பிரசன்ன மாயிருக்கிறதுமான எம் இலங்கைத் திருநாட்டில் இவ்வருடம் ஐக்கிய நாடுகள் சபையில் 14 வது வெசாக் திருநாளைக் கொண்டாடுவது பொருத்தமானதேயாகும்.

வெசாக் என்பது அமைதியினதும், ஒளியினதும் திருநாளாகும். இவ் வெசாக் திருநாளானது அனைத்து மக்களுக்கும் சமாதானத்தைக் கொணர்வதாக வெசாக்கின் ஆன்மீகக் கதிர்கள் பௌத்தர்களிடையேயும் அனைத்து மக்களிடை யேயும் ஒற்றுமையைத் தருவதாக. எம் பௌத்த மத சகோதர சகோதரிகளுக்கு வெசாக் திருநாளின் ஆசீர்வாதங்கள் பெருகிட உளமார வாழ்த்துகின்றோம்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## வணக்கத்துக்குரிய மாதம்

அருளடையாளங்கள், மரியாள் வணக்கம், புனிதர்கள் பக்தி கத்தோலிக்க திருச்சபையின் வாழ்வு, வழிபாடு, விசுவாசக் கூறுகளில் மிக முக்கியமான அம்சங்கள் என்றால் அவை மிகையாகமாட்டா.

படித்தவர், படிக்காதவர், கிறிஸ்தவர் – கிறிஸ்தவரல்லாதவர் என்ற பாகுபாடின்றி அனைவரும் அன்புடன் அண்டி வரும், பக்திப் பரவசத்துடன் பார்க்க வரும் ஆபத்துக்கள், துயர்களில் துயர் துடைப்பவள் என்று மக்கள் நம்பும் அன்னை கன்னி மரியாவுக்கு வணக்கம் செலுத்தி, செபமாலை, மன்றாட்டு மாலை, நவநாள் செபம் என்று மரியன்னையை கடவுளின் தாயாக நம் தாயாகப் புகழ திருச்சபை தந்துள்ள வணக்க மாதம் தான் 'மே' மாதம்.

தன் புகழை எழுத்தால், பாட்டால், ஓவியத்தால் முழுமையாக வெளிப்படுத்த இயலாத அளவுக்கு விஞ்சி நிற்பவர் மரியாள்! ஏனெனில், மரியாளின் புகழ் எழுத்துக்கும், இலக்கியத்துக்கும், கவிதைக்கும், காவியத்துக்கும் அப்பாற்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் மரியாளை 'அன்னை மரியா திருச்சபையின் தாயும், மாதிரியும்' என்கிறது.

ஒரு தாயின் அன்பை முழுமையாக எடுத்துரைக்க உலக மொழிகளிளெல்லாம் தேடினாலும் போதிய வார்த்தைகள் கிடைக்காதபோது, உருவில்லாக் கடவுளுக்கே உருக் கொடுத்த மரியாளை, வண்டுபடாத வெண்பா மலரை நம்மால் முழுமையாகப் புகழ்ந்துவிட முடியுமா? இல்லை.... நம் மரியன்னையைப் புகழாமல் இருப்பதுதான் மனிதப் பிறவிக்கு அழகா? இதனாலோ என்னவோ புனித அகுஸ்தினார் "ஒரு மனிதனின் உடலிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் நாக்குகளாக மாறினாலும் மரியாளை அவரது தகைமைக்கு ஏற்றவாறு புகழமுடியாது" என்கிறார்.

மரியா பக்தி விலிலியம் சார்ந்ததும், விசுவாசப் பாரம்பரியம் சார்ந்ததும் ஆகும். "அருள் நிறைந்த மரியே வாழ்க" (லூக் 1:28) என்று தந்தைக் கடவுள் தமது தூதர் வழியாக வாழ்த்தியது தொடங்கி, "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக் 1:42-43) என்று பரிசுத்த ஆவியானவர் எலிசபெத் வழியாக உறுதிசெய்து, "இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:46) என்றுமரியாவே தனது புகழ்ப் பாடலில் இறைவாக்குரைத்ததை இயேசு இவ்வுலகில் ஊனுடலுடன் உயிர் வாழ்ந்த காலத்திலேயே அவரது போதனைகளையும் புதுமைகளையும் கண்ட ஒரு பெண், "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" (லூக் 11:27) என்று கூறி நிறைவேற்றியதையும் விவிலியம் விளக்குகிறது. அதுபோல திருச்சபையின் தொடக்க காலம் முதல் மரியன்னைப் பக்தியும், மரியாள் பற்றிய சிந்தனைகளும், விவாதங்களுமே இயேசு பற்றிய மறையுண்மைகள் வெளிவரக்காரணமாக இருந்துள்ளன.

மே மாதத்தை "மரியாளின் மாதம்", "மாதா வணக்க மாதம்" என்கிறோமே அதன் முக்கியத்துவம் என்ன? வரலாறு என்ன?

மே மாதத்தை மரியாள் வணக்க மாதமாகக் கொண்டாடும் வழக்கம் திருச்சபையில் 19 ஆம் நூற்றாண்டில் தொடக்கப்பட்டது. என்றாலும், மரியாள் பக்தி திருச்சபையுடன் தோன்றிய ஒன்றாகும்.

மார்ச் 21.1915 மற்றும் யூன் 22, 1822 ஆகிய திகதிகளில் திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் விடுத்த ஆணைகளில் "மே மாதத்தில் மாதாவுக்கு வணக்க வழிபாடு செய்யும் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நாளும் 300 நாள்களின் ஞானப்பலன்களைப் பெறுவார்கள். மே மாதத்தில் ஏதாவது ஒரு நாளில் ஒரு பரிபூரண பலனைக் கட்டாயம் பெறுவர். அல்லது யூன் மாதம் முதல் எட்டு நாள்களுக்குள் ஏதாவது ஒரு நாளில் ஒரு பரிபூரண பலனை அடைவர்" என்று கூறியுள்ளார்.

"லோரேட்டோ பிரார்த்தனை" மாதா பிரார்த்தனை என்று அழைக்கப்படுகிறது. இதில் 48 பாரம்பரியச் சிறப்புமிக்க பெயர்களின் வழியாக மாதாவிடம் வேண்டிக்கொள்ள திருச்சபை அழைக்கிறது. இந்த மாதா பிரார்த்தனை மலர்ந்த இடம் இத்தாலி நாட்டின் லோரேட்டா நகரமாகும். இதை 1557 இல் புனித பீட்டர் கனிசியூஸ் வடிவமைத்தார். மாதாவுக்கான இந்தப் பிரார்த்தனை வழிபாட்டுப் பழக்கமே "மே" மாத வணக்க வழிபாடாகிப் போனது.

திருச்சபை கடந்த 2017 ஆண்டுகளாக இறைவனின் தாய் நம் தாய் மரியாளுக்கு அளித்து வரும் வணக்கத்தையும், வணக்க மாதத்தின் பலன்களையும் உணர்ந்து "மரியா வழி இயேசுவிடம்" என்னும் இறையாட்சிப் பயணத்தில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

---

# மூத்த குருவுக்கொரு முத்தான அஞ்சலி



மிருசுவில் மண்ணில் பிறந்து
எண்பத்தாறு ஆண்டுகள்
இவ்வுலகில் வாழ்ந்து
ஐம்பத்தொன்பதுஆண்டுகள்
ஆண்டவன் பணி செய்து
அருட்தந்தை குணசீலன்
ஆண்டவன் பதம் சென்றார்

இளமை முறுக்குடனே
இறைபணிக்கொரு இளம்குரு
மன்னார் மாவட்டப் பங்குகளில்
(நானாட்டான், வங்காலை)
மகத்தான பணிகள் செய்து
மக்கள் மனங்களில் அமர்ந்தான்

யாழ். மறைமாவட்டத்தில்
துடிப்போடு பணிகளாற்றி
தூதுரைப்பணியை அணி செய்தார்
இளையோரை அணிசேர்த்து
அருட்பணிக்கு அனுப்பி வைத்து
குருத்துவ உருவாக்கலில்
குருமட அதிபராய்
விவிலிய விரிவுரையாளராய்
விசுவாச வழிகாட்டினார்

பங்குகளில் விழிப்புணர்வும்
பக்திநிறை மறையுரையும்
திருவழிபாட்டிலே திடமான
திருச்சபையின் போதனைகள்
திருவருட்சாதனம் வழங்குவதில்
முறையான பயிற்சிகளும்
கரிசனையும் கொண்டவர்.

குடும்பத் தரிசிப்புக்கள்
குடும்பவள ஆலோசனைகள்
நூல்கள் கையேடுகள்
விளக்கங்களை அளித்தும்
ஒப்புரவு அருட்சாதனம்
ஓயும் வரை வழங்கி வந்தார்.

எப்பொழுதும் செபமாலை
இறையன்னை நம்பிக்கையில்
இறைபதம் அடையும் வரை
கல்வியாளனாய் இருந்து
(அருட்கலாநிதி குணசீலன்)
கடைசிவரை பணியில் சிறந்தார்
எமக்கெல்லாம் எடுத்துக்காட்டாய்
அருட்பணியாளர் பலரை
உருவாக்கிட ஓயாதுழைத்து
இறைஉறவில் கலந்துள்ள
மூத்த குருவுக்கொரு
முத்தான அஞ்சலிகள்

அ.அன்ரனிபீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

---


**HOLY CROSS SCHOOL OF NURSING**

769, Beach Road, Jaffna, Sri Lanka. Tel: 021 222 2512

இலவச உதவி தாதியர் பயிற்சி
சான்றிதழ் கற்கைநெறி
( NURSING ASSISTANT )
( CERTIFICATE COURSE )
( 6-9 மாதங்கள் )

க.பொ.த சாதாரணம் கற்றவர்கள் தங்களது சுயவிபரக்கோவையுடன் எதிர்வரும் 11.05.2017க்கு முன்னதாக இல. 767/4 கடற்கரை வீதி - யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருச்சிலுவை தாதியர் பாடசாலைக்கு நேரில் சமுகம் தரவும்.

பணிப்பாளர்

Holy Cross school of health science
Beach Road Jaffna.

தொ.பே: 0213001102
0771159391


---

# 3ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 07.08.1941
உதிர்வு : 03.04.2017

திருமதி
அகஸ்ரின் அன்னம்மா

"நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் இறைவா
முடிவில்லா ஒளி இவர் மேல் ஒளிர்வதாக"

ஆறாத்துயரில்
கணவன், பிள்ளைகள், உறவினர்

54, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, பாசையூர்

---

# 13ம் ஆண்டு நினைவஞ்சலி



S.A.E. இரட்ணராஜா

பிறப்பு 27.05.1935
இறப்பு 20.05.2004

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவைதனில் ஓர் ஆசானாய்
ஊரினில் கலைவித்தகனாய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, திருமதி இ.இரட்ணராஜா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பொன்.

---

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 - 07 - 1949



மறைவு
27 - 05 - 2016

## சவரியான் ஜேம்ஸ் ஜெகநாதன்

(இந்திரன்)

இவரது ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 27.05.2017 காலை 6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

6,1ம் குறுக்குத்தெரு
குருநகர்.யாழ்ப்பாணம்

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,சகோதரர்கள்,
உறவினர்கள்

# இறை அழைத்தல் ஞாயிறு

## இறையழைத்தல் இயக்குனர் தந்தை அருட்திரு ச.யோ.க.பாஸ்கரன் அவர்களிடமிருந்து...



# உம் இதயத்திற்கு உகந்த மேய்ப்பர்களை அனுப்பியருளும்

**இறை அழைத்தல் ஞாயிறு :** நல்லாயன் ஞாயிறாகிய 07.05.2017 அன்று நாம் இறை அழைத்தல் ஞாயிறையும் கொண்டாடுகிறோம். இன்று மட்டுமல்ல என்றுமே இறை அழைத்தல்களை ஊக்குவிக்கவும் இந்நாளில் அழைக்கப்படுகிறோம்.

**இறைவனே நல்லாயன் :** ஆட்டு மந்தையின் நல்லாயனாக ஆண்டவர் இயேசுவை நாம் இன்று அனுபவிக்கின்றோம். மந்தையை காப்போனாக, மந்தையை நல்ல நீர் தடாகங்களுக்கும் புற்றரைகளுக்கும் கூட்டிச்செல்வோனாக, சிதறுண்ட மந்தையைக் கூட்டிச் சேர்ப்போனாக, காயப்பட்ட மந்தைக்குக் கட்டுப்போடுபவனாக, மந்தையை அழிக்க வரும் சக்திகளை கொன்றழிப்போனாக வழி தவறியலையும் மந்தைக்கு நல் வழியுமானவனாக இறைவனைத் திருவிவிலியத்தில் காண்கின்றோம்.

**நல்லாயனாகப் பணி செய்யு குருத்துவம் :** காயின் ஆபேல் தொடர்ந்து இறைசாயல் இழந்து, அழிந்து கொண்டிருந்த மனித இனத்தை மீண்டும் இறை சாயல் கொண்ட இறைகுலமாக்க, திருவிவிலியத்தில் தன்னை நல்லாயனாக அடையாளப்படுத்திய இறைவன், இன்று காயின் ஆபேல் போல் இறைசாயல் இழந்து, அழிந்து கொண்டிருக்கும் மனித இனத்தை மீட்டு இறை சாயல் கொண்ட இறைகுலமாக்க, தன் இதயத்திற்கு உகந்த நல்லாயன் பணி செய்யவே குருத்துவத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இறைவன் தன் மக்களின் விடுதலைக்காகப் பலரை நல்லாயன்களாக குருத்துவம் என்னும் மறைபொருளால் அருட்பொழிவு செய்கிறார். விண்ணிலிருந்து அருளப்படாவிட்டால், தன்னிகரில்லா "நல்லாயனாகும் குருத்துவத்தை" எவரும் எளிதில் அடைந்து விடமுடியாது. தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே குருக்களை இறைவன் அறிந்து அவர்கள் பிறக்கு முன்பே அவர்களைத் திருநிலைப்படுத்தி வருகின்றார்.

இவர்கள் மனிதர்களிடமிருந்தே தேர்ந்து எடுக்கப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுத்து, அருட்சாதனங்களை நிறைவேற்றி, நற்செய்தியைப் போதித்து, இறைமக்களை இறை வழியில் நடத்திச்சென்று, இறைவனுக்கும் மனிதனுக்கும் பாலமாகத் தன்னை அர்ப்பணித்து நல்லாயனாக வாழ்பவர்கள்.

**அறுவடையோ மிகுதி :**

இன்றைய இயந்திரங்களின் சுகத்துக்குள்ளும், தொலைத் தொடர்பு சாதனங்களின் கவர்ச்சிக்குள்ளும், தொலைக்காட்சிகளின் மோகத்துக்குள்ளும், போதைப் பொருட்களின் பழக்க வழக்கங்களுக்குள்ளும் வாள் வெட்டு கலாசாரத்துக்குள்ளும், உலக மயமாக்கல் வலைக்குள்ளும், உலகப் போக்குகளின் சிக்கல்களுக்குள்ளும், நுகர்வுக்கலாசார சந்தைக்குள்ளும், அவசர இயந்திர வாழ்க்கைக்குள்ளும் கலாசாரப் பிறழ்வுகளுக்குள்ளும், மனிதமிழந்த மிருகத்தனம் நிறைந்த சுயநல வட்டத்துக்குள்ளும் அடிமை யாகி மனித இனம் அழிந்து கொண்டிருக்கிறது. இதனால் இன்று பாசங்களின்றி வேஷங் கொண்டவர்களாக, அன்பின்றி ஆதரவற்றவர்களாக, உறவுகளின்றி அநாதைகளாக, பணமிருந்தும் மனாங்களின்றி இயந்திரங்களாக, வாழ விரும்பியும் வாழ முடியாதவர்களாக, எல்லாமிருந்தும் வாழ்க்கையைத் தொலைத்தவர்களாக வாழ்கின்றோம்.

**வேலையாட்களோ குறைவு :**

நல்லாயன் இயேசுவின் இதயத்தைப் பின்பற்றி அழிந்து கொண்டிருக்கும் மனித குலத்தை மீட்டெடுப்பதே குருத்துவத்தின் பணி. நல்லாயன் இயேசுவின் இதயத்திற்கு உகந்த நல்ல மேய்ப்பர்களே இன்று அதிகமதிகம் தேவைப்படுகின்றார்கள்.

நல்லாயனாகப் பணி செய்ய இலட்சியக்குருக்கள் இன்று நிறையவே தேவை.

**அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள் :**

இந்தக் குருத்துவம் என்ற இறை அழைத்தல் என்பது ஒரு கொடையாகவும் ஒரு மறைபொருளாகவும் உள்ளது. வெளியிலிருந்து வருவதாகவும் உள்ளுணர்வின் சக்தியாகவும் உள்ளது. உங்கள் பிள்ளைகளுக்கு இறை அழைத்தல் உள்ளதா எனத் தெரிந்து கொள்ளுமாறு அவர்களை ஊக்கப்படுத்துங்கள். உங்கள் செபங்களிலே இறை அழைத்தலுக்காக செபியுங்கள். எம் ஒவ்வொருவரின் தார்மீகக் கடமையான இறையழைத்தலை ஊக்குவிக்க அருட்தந்தையர்களே !

**1." இறையழைத்தல் ஞாயிறு "** வைகாசி 07.2017 அன்று உங்கள் பங்கில் அல்லது நீங்கள் பணிபுரியும் பாடசாலையில் உங்கள் குழும் சமூகத்துக்கு வசதியான ஒரு நாளில், உங்கள் பங்கு மற்றும் ஆலய அருட்பணி சபையினர், மறையாசிரியர்கள், இளைஞர் மன்றத்தினர், ஆசிரியர் குழாம் இவர்கள் ஒத்துழைப்புடன், இறையழைத்தலை ஊக்குவிக்க உரிய நடவடிக்கை எடுக்க பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

2. உங்கள் பாடசாலையின் தரம் 7 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களின் வகுப்பு ஆசிரியர்கள் அல்லது கிறிஸ்தவ பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அல்லது கத்தோலிக்க ஆசிரியர்கள் ஊடாக இம்மாணவர்கள் மத்தியில் இறையழைத்தலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல்.

3. குறிப்பாக இதுவரை குருக்கள் உருவாகாத பங்குகள், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து, உங்கள் நம்பிக்கைக்கு உரிய மாணவர்களை இனங்கண்டு, இறையழைத்தலை ஊக்குவிக்க அன்பாகக் கேட்டு நிற்கின்றோம்.

ஆன்மீக தாகம் கொண்ட, ஒழுக்கத்தில் கல்வியில் சிறந்த, இறைவனுக்கும் யாழ் மறைமாவட்டத்துக்கும் சொந்தமாகி எல்லா மக்களுக்கும், பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் குருத்துவப் பணி செய்யக்கூடிய மாணவர்களை, இனங்கண்டு அவர்களில் இறையழைத்தலை ஊக்குவிக்க உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

4. இறையழைத்தலை மையப்படுத்திய மறையுரைகள், சிறப்புத் திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகள் இறைமக்கள் மன்றாட்டு, திருப்பலியில் சிறப்பு அறிவித்தல்கள் மூலம் ஊக்கப்படுத்தல்

**பங்குச் சமூகமே :**

பங்கு மற்றும் ஆலய அருட்பணிசபையினரே, மறையாசிரியர்களே, இளைஞர் மன்றத்தினரே தரம் 7 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களை சந்தித்து இறையழைத்தலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுங்கள்.

**புனித மடுத்தினார் குருமட மாணவர்கள் :**

1. புனித மடுத்தினார் குருமட மாணவர்களின் " இறையழைத் தலை ஊக்குவிக்கும் பட்டறை " நிகழ்வு: கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மறைக் கோட்டங்களின் பங்குகளில், பங்கு பீடப் பணியாளர்களை பங்குகளாகச் சந்தித்து, இந்தப் பட்டறை நடாத்தப்பட்டு வருகின்றது. ஏனைய மறைக் கோட்டங்களின் பங்குகளுக்கும், பங்கு பீடப்பணியாளர்களை பங்குகளாக சந்தித்து, இந்த " இறையழைத் தலை ஊக்குவிக்கும் பட்டறை "நிகழ்வை நடாத்த, புனித மடுத்தினார் குருமட மாணவர்கள் வருகை தரவுள்ளார்கள்.

**பெற்றோரே :**

இறையழைத்தலுக்காக குடும்பங்களாகச் செபிக்க ஊக்கப்படுத்தல். உங்கள் பிள்ளைகளில் ஒருவரையேனும் ஆண்டவர் பணிக்கு அர்ப்பணியுங்கள்.

**யாரை நாம் அனுப்புவோம் :**

என் அன்பிலுள்ள மாணவச் செல்வங்களே! நல்லாயன் இயேசுவின் இதயத்தைப் பின்பற்றி அழிந்து கொண்டிருக்கும் மனித குலத்தை மீட்டெடுக்கும் குருத்துவத்தின் பணி செய்திட ஆண்டவர் அழைக்கிறார். அழைப்பின் குரல் கேட்பீர்.

**அழைப்பின் குரல் கேட்போம் :**

2018 ஆம் ஆண்டு புதிய மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவம் புனித மடுத்தினார் குருமட அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப் பத்தை முழுமையாகப் பூர்த்திசெய்து ஆனி மாதம் 15 ஆம் திகதிக்குமுன் குருமட அதிபரிடம் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பித்தவர்களுக்கான மூன்று நாள் வதிவிட "வந்து பாருங்கள்" நிகழ்வு புனித மடுத்தினார் குருமடத்தில் ஆவணி மாதத்தில் நடைபெறும்.

புதிய மாணவர்களை சேர்ப்பதன் விடயமாக மேலதிக விபரங்கள் தேவை ஏற்படின் இறையழைத்தல் இயக்குநர் தந்தையை (குருமட அதிபர்) தொடர்பு கொள்ளலாம்.

# இறை அழைத்தலில் ஆசை கொள்வோம்



"தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கின்றார்" (உரோ:8:30)

இறையாட்சிக்கான புனிதப் பயணத்தில் பங்கெடுக்க இறைவனால் பல சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன. அந்த வகையிலே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்க "அழைப்பு" எம் முன்னிலையில் எமக்காக நாம் வாழ இறைவனால் வாழ்வாக்கப்படுகின்றது. இறைத்திட்டத்திற்கு அமையவே இவ்வழைப்பானது யதார்த்த நிலை எடுக்கின்றது.

மனித வாழ்வில் வரலாற்றுப் பக்கங்களில் பல நிலைகளில் இந்த அழைப்பானது வரையறுத்துப் பார்க்கப்படுகின்றது. ஆனால் உண்மை என்னவெனில், எமது மனங்களின் மூளையில் முடிந்து வைத்திருக்கின்ற ஆசைகளையும் தேவைகளையும் சூழமைவாகக் கொண்டு நாம் நவநாகரீகச் சந்தையில் விலைபோகும் சுகங்களை எம் வாழ்க்கைத் தேடலாகக் கொண்டிருக்கிறோம்.

இதனால் நேற்றைய வேதனைகள், நாளைய கவலைகள் என்கின்ற இரு கள்வர்களுக்கு நடுவில் எமது வாழ்க்கை நாளாந்தம் அறையப்படுகின்றது. இந்நிலையில் இறை அழைப்பை பல சந்தர்ப்பங்களில் நிராகரிப்பதும், நிர்மூலமாக்குவதையுமே இன்றைய சமுதாயம் விரும்புகின்றது.

மறைமாவட்ட குருக்களின் பாதுகாவலராகிய புனித ஜோன் மரிய வியான்னி கூறுவதைப்போன்று "ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் விலக்கின் குரலும், வானதூதரின் குரலும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன". ஆனால் இதில் எதை நாம் முன்னிலைப் படுத்தப் போகின்றோம் அல்லது எதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றோம் என்பதிலேயே எமது புனிதத்தை நோக்கிய மனிதப் பயணம் உருவெடுக்கும்.

அழைத்தல் வாழ்வு என்பது அழுகைகள் அவமானங்கள், கண்ணீர்கள், காயங்கள், ஏமாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள், வேஷங்கள் வேதனைகள் நிறைந்தவை என தவறாக நினைக்கின்றோம். ஆனால் உண்மை என்னவென்றால் கருணையுடன் கையளிப்பிற்காக வாழ இறைவன் தரும் சந்தர்ப்பமாகும்.

தூய பவுலடிகளார் கூறுவதைப்போல "வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம் இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம் (உரோ 14:8)" என்கின்ற மனநிலையோடு நாம் வாழ்கின்ற இவ் வாழ்க்கையானது ஒரு புரியாத மன நிறைவை எமக்குத் தந்து எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றது.

ஏன்? எதற்காக? இந்த சந்தர்ப்பம் என்றால்

1. இயேசுவில் அவரது அன்பில் நிலைத்திருந்து (யோவான் 15:8) அவரின் கட்டளையை கடைப்பிடிக்க (யோவான் 15:10)

2. குடும்ப உணர்வுடன் ஒருவர் மற்றவரை அன்பு செய்து வாழ (யோவா 15:12)

3. இயேசுவிற்கு சாட்சிய வாழ்வு வாழ (தீ.ப. 1:8)

இப்படிப்பட்ட உன்னத மான, புனிதமான அழைப்பு, இன்று பல காரணங்களினால் வாழ முடியாத அல்லது வேறுபட்ட வாழ்வாகப் பார்க்கப்படுகின்றது.

உலகியல் சார்ந்த வாய்ப்புக்களுக்கும், நவீனத்தின் மாயைக்குள்ளும் ஏமாந்து போதல், பெற்றோர் இறையழைப்பை அல்லது இறைபணியை விடுத்து ஏனைய நிலைகளில் பிள்ளைகள் வாழ வழிகாட்டுதல், எல்லாவற்றிலும் சினிமா, விளையாட்டு, நவீன கலாசார மோகம் உட்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் பிள்ளைகள் மட்டில் அழைத்தல் வேண்டப்படாத விரும்பப்படாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இறைவனுடைய அழைப்பு எங்களால் எங்கள் பலவீனங்களால் உருக்குலைந்து போகும் பரிதாப நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இத்தகைய சூழமைவில் பெற்றோர், சகோதரர்கள் ஆலய பங்கு சமூகத்தினர் இறையழைத்தல் மட்டில் கூடிய வகிபங்கு வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தங்களது இறைபயம் இறைபக்தி நிறைந்த வாழ்வு, முன்மாதிரிகையான குடும்ப வாழ்வு, குருக்கள் மட்டிலான அக்கறை, இவற்றினூடாகப் பிள்ளைகளுக்கு அழைத்தல் மட்டில் ஆர்வத்தையும் ஆசையையும் ஊட்டி இறைபணிக்காகப் பிள்ளைகளை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

அனைத்தையும் சீர்தூக்கிப் பாருங்கள். நல்லதைப் பற்றிக் கொள்ளுங்கள் (1 தொ.லோ 5: 2-11) என்பதிற்கிணங்க நன்மையை நினைத்து இறைவனுக்காக தியாகம் நிறைந்த அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வு எமது குடும்பங்களினால் வாழப்படுமானால் எத்தகைய உலகியல் மாற்றங்களுக்கும் நாம் மரணித்துப் போகாமல் வாழத் துணை புரிவது மட்டுமன்றி, இறையருளால் நாம் முழுமையாக நிரப்பப்பட்டு இறையுறவில் ஆழப்படுத்தப்படவும் வழிவகுக்கும் என்பது நிட்சயத்தன்மை நிறைந்ததாகும்.

F.A.S.சசிகரன் - உருத்திரபுரம்

---

# எல்லாமுள்ள வெறுமையும், ஒன்றுமில்லா நிறைவும்



போலிகளின் உலகமிது! இலக்கணத்தில் மட்டும் இருந்தபோலி, பொருட்களில் தாவி பொழுது போக்குகளை மேவி, காய்கறிமுதல் கம்பியூட்டர் வலைப்பின்னல் வரை எங்கும் போலி, எதிலும் போலி என்றாயிற்று இன்று. உண்மைச் சாயம் பூசப்பட்டபொய்மையின் குடியிருப்பே போலி என்கின்றனர்.

அரிசி முதல் அரசியல் வரை இருந்தபோலி, மானுட வாழ்க்கையையும் அதுவிட்டு வைக்கவில்லை! 'எல்லாமுள்ள வெறுமை' என்னும் வாழ்க்கைச் சக்கரத்துள் இன்று மனிதம் சுழன்ற வண்ணமுள்ளது. 'கையில் கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு பையை நிரப்புதல்' என்பதே இன்றைய மகுட வாசகமாய் எல்லார் கழுத்திலும் தொங்கிக்கொண்டிருக்கிறது.

அதனால் உலக மயமாக்கல் என்ற பொருண்மையுள் - இருண்மையுள் உண்மை வாழ்வின் பொறிகளைத் தொலைத்து, நிர்வாண மனிதர்களாய் - விலங்கிடப்பட்ட மானுடமாய் அடிமைப்பட்டுக் கிடக்கிறது மனிதம். சமூக உயர் விழுமியங்களும், மனிதநேயம் சார்பு இலக்கணங்களும் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. முலாம் பூசப்பட்ட பொய் வாழ்வு 'உண்மையாய்' ஊடகங்களின் சித்தரிப்பில், விளம்பர சந்தையில் முதலிடம் பிடிக்கின்றன.

மறுபுறத்தில் நேசிக்கப்பட யாருமில்லா இதயங்கள், கல்வி உரிமை மறுக்கப்பட்டு கண்ணோரம் நீர் சிந்தும் சிறுவர் உலகம், போ-ரின் சாபத்தில் 'பாவம்' ஆனவர்கள் உரிமை பெற்றுத்தர யாருமில்லையே என்று முடிவி லிகளாகிப் போகின்றன.

இந்நிலையில், அயல் கடல் அருகில் தெறிக்கும் நீர்த்துளிகளால் சிலிர்ப்படைந்து பிறரன்பில் ஈரமாகிப் பணிபுரியத் தயாராகும் இளையோர் தேவையாகவுள்ளது.

போலிகலெனும் அபாயப் பெருநெருப்புக்குள் விட்டில் பூச்சிகளாய் வீழ்ந்து வாழ்வைக் கருக்கிக் கொள்ளாது மானுட அன்பில் நனைந்து சுயநலம் கடந்து உன் இளமை வலிமை ஆற்றல் என்பவற்றை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க நீதயாரா? மென் உணர்வு கொண்ட உயிரியல் பரிணாமம் ஒன்று உனக்குள் உண்டு. அமைதியில் அதைச் செவிமடுத்தால் அதுவே ஆண்டவர் குரல்! உனக்கான அழைத்தலும் அதுவே.

அது உன் வாழ்வின் உண்மை நிறைவுக்கும் பல்லாயிரம் மனிதர்களின் வாழ்வின் மலர்ச்சிக்கும் காரணியாகுமே.

பயணம் நீண்டதுதான். ஆனால் நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டன் என்னும் ஆண்டவரின் உடனிருப்பு உன் கால்களுக்கு வலிமை சேர்க்கும். புறப்படுவோமா?

அருட்பணி S.J.அருட்செல்வன்



# மக்கள் மனங்களில் நிறைந்திருப்பவள்

# புனித கன்னி மரியாள்

அருட் தந்தை.யா. றமேஸ் அ.ம.தி

மே மாதத்தை மரியாளின் வணக்க மாதமாகக் கொண்டாடும் வழக்கம் திருச்சபையில் 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. என்றாலும் மரியாள் பக்தி திருச்சபையுடன் தோன்றிய ஒன்றாகும்.

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் மரியாள் வணக்கம் சிறப்பிடம் பெறுவது பேருண்மை. ஏனெனில் இறைவனுக்குகந்த இதயம் உடையவளாக விளங்குபவள் எம் அன்னை. மக்கள் இறைவனை நாடவும், தம் வாழ்வால் இறைவனைப் பிரதிபலிக்கவும் கற்றுகொடுத்து வழிகாட்டுபவர் அன்னையே. திருமறைத் தந்தையர்களும், திருச்சபையோடு ஒன்றுபட்ட இறைவல்லுனர்களும், "மரியாள் துணையின்றி எந்த மனிதனும் ஈடேற்றம் அடைய முடியாது "என்று கற்பித்தனர். இறைவனின் மீட்புத் திட்டத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதாவது 'மனுவுரு வான அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய் இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்படைகிறோம்' (எபே 1:7). 'கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதனான இயேசுக் கிறிஸ்துவே.

இவர் அனைவரின் மீட்புக்காகத் தம்மையே கையளித்தார்' (1 திமோ 2:5-6). ஆனால் அவர் இம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மனுக்குலத்தின் பிரதிநிதியாக புனித மரியாளையே தேர்ந்து கொண்டார். மரியாளோ 'ஆகட்டும்' என்னும் வாக்குறுதியால் இறைவனுக்கு கீழ்படிந்து அவருடனும்எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மீட்புத் திட்டத்தில் பங்கேற்றாள் என சங்கவுரை கூறுகிறது. இதனால் அன்னையின் அளவற்ற வல்லமையை நம்பி, அன்னைக் குரிய அன்புணர்வோடு அவள் பதம் வரும் மக்களின் மனங்களில் அன்னை நிறைந்திருப்பது கண்கூடு.

இறைவனின் நித்திய திட்டத்தில் மரியாளின் பொறுப்பு எத்தகையது என்பதைப் பற்றித் திருத்தந்தை 10ம் பத்திநாதர் அழகாகக் கூறுகிறார். கன்னி மரியாளுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ளமன ஒன்றிப்பு, பாடுகளின் ஒன்றிப்பு என்பவற்றால் மரியாள் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குல மீட்புக்கு காரணமானாள். கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த பெறுபேறுகளை பகிர்ந்தளிப்பவளாக மரியாள் காட்சி தருகிறாள். ஆதலால் அவளே வரங்களை வளங்கும் முதல் பணியாளராகிறாள் என்கிறார் திருத்தந்தை. இவ் வாறு திருச்சபையின் தலைவர்களும் தந்தையர்களும் மரியாள் வணக்கத்தின் மேன்மையினையும், நாம் செபமாலை மூலமாக செபிக்கவேண்டிய தன் தேவயினையும், முக்கியத்துவத்தினையும் எமக்குக் கற்பிக்கிறார்கள். மரியாவின் பரிந்துரை மூலமாக வரலாற்றில் திருச்சபை சாதித்த வெற்றிகளைச் சான்றாகக் கொண்டு மரியாள் ஊடாக இறைவனைப் புகழ, வைகாசி மாதத்தினை மரியாவின் வணக்க மாதமாக திருச்சபை கொண்டாடி வருகிறது. மரியாள் என்னும் மறைபொருள் இறைவனின் ஞானத்திலே அவரது மேலான திட்டத்திலே தோன்றியதொன்றாகும்.

இதன் உண்மைத் தன்மையை ஆழ்ந்த விதத்திலே சிந்தித்து அவற்றின் ஒளியில் நமது விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்புவதுதான் மரியாள் வணக்கத்தின் நோக்கமாகும். எனவே மரியாள் வணக்கம் என்பது வெறும் உணர்ச்சி சம்மந்தமான தோன்றலல்ல. அவ்வாறிருப்பின் மரியாளை நாம் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பது தான் அர்த்தம். நற்செய்தியில், மரியாள் இறைவனின் வார்த்தையை ஏற்று அதன்படிதன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்ற மாதிரிகையுள்ள கன்னியாக, பொறுப்புள்ள ஓர் அன்னையாக சித்தரிக்கப்படுகிறாள். கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை கொண்டு, அவள் செயலிலே ஒரு தெளிவைப் பெற்று, இயேசுவை யாரெனத் தன் உள்ளத்தில் சரியாக இனங்கண்டு, அவருடைய சீடர்களுக்கும், மக்களுக்கும் இயேசுவை வாழ்வதற்கு மாதிரிகை காட்டியவர் தான் அன்னை மரியாள்.

கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாச வாழ்வில் நடுநாயகமாகத் திகழ்பவர் கிறிஸ்துவே. அவரதுபாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற மறைபொருளில்தான் எமது கிறிஸ்தவ விசுவாசம் கட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குலத்தின் மீட்புக்காக தன்னைத் தியாகம்செய்தஅன்புத்தாயாகஎமதுஅன்னையை எம் மனங்களில் சுமப்பதும் எமது செபங்களில் இணைப்பதும் தகுதியான்தே. அன்னையை 'அம்மா' என்ற உன்னத வார்த்தை மூலமாக உறவு கொண்டாடும் நாம், அன்னையின் வாழ்வில் ஒளிர்விட்ட சிறந்தபண்புகளும் மதிப்பீடுகளும் எமது வாழ்விலும் உருவம் பெற அன்னையின் மூலமாக செபிக்க வேண்டும். வாழ்வின் அன்றாட பிரச்சினைகளையும், சவால்களையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ள செபமாலைத் தியானம் எம்மை இட்டுச் செல்ல வேண்டும். இந்த மனநிலையோடு இம் மாதம் முழுவதும் மரியாவோடு இணைந்து இறைவனின் அருளை நாடுவோம்.

இம்மாநிலத்தின் ஈடேற்றத்திற்காக அன்னையை மாதிரிகையாக்கி இயேசுவின் வழியில் இறைவனிடம் செபிப்போம்.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலியும் (27.03.2016)
## 62 வது பிறந்த நாள் நினைவும் (11.05.1955)

பிறப்பு: 11 - 05 - 1955

இறப்பு: 27 - 03 - 2016



AD40

அமரர்

**கனகராஜா மரியகொறற்றி (நேசராணி)**

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "

நாவலர் வீதி
நாவாந்துறை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நினைவலைகளில் 2ம் ஆண்டு

மண்ணில்: 02 - 12 - 1943

விண்ணில்: 13 - 05 - 2015



AD39

**அமரர் அருள்ராசா ரோசமலர்**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

நாவாந்துறை

அன்பைச் சுவைத்த
கணவன், பிள்ளைகள்

## 8ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு: 13 - 05 - 1968

உதிர்வு: 18 - 05 - 2009



AD35

குருத்துவம்

14.05.2003

**அருட்தந்தை ம. ததேயுஸ் சறத்ஜீவன்**

" நல்ல ஆயன் நானே, தந்தை என்னை அறிந்திருக்கின்றார்
நானும் தந்தையை அறிந்திருக்கின்றேன்.
அது போல் நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன்.
என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன.
அவைகளுக்காக என் உயிரைக் கொடுக்கின்றேன்." (யோவான் 10:14-15)

இவரின் ஆன்ம சாந்திக்காக 18-05-2017 வியாழக்கிழமை அன்று காலை 5.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், 18-05-2017 வியாழக்கிழமை அன்று புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

அருட்தந்தை யூட் அமலதாஸ்
பங்குத்தந்தை
புனித பற்றிமா அன்னை ஆலயம்
உருத்திரபுரம்

தகவல்
குடும்பத்தினர்
இல. 05 பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**"தீய நாட்டங்களின் பிடியில் சிக்கிக் கொள்ளாதே.**
**இல்லையேல் காளையிடம் சிக்கியவன் போல கீறிக் குதறப்படுவாய்." ( சீராக் 6: 2 )**

# திசையை மறக்கும் பறவைகள்

சிறுகதை



திருப்பலி முடிந்து எல்லோரும் சென்ற பின்னர் ஆலயத்தின் வளாகத்தின் முன்புறத்திலே குடை விரித்து நிழல் பரப்பியிருந்த கொன்றை மரத்தின் அடியிலே போடப்பட்டிருந்த பெஞ்சிலே உட்கார்ந்தார்கள் அப்பாவும் மகளும். "என்னம்மா...ஏதோ பேசணும்னு சொன்னியே... சொல்லும்மா..." அப்பா பரிதவிப்போடு கேட்டதும் சிறிது நேர மௌனத்தின் பின் மகள் வாய் திறந்தாள். அவள் சொல்லச் சொல்ல அப்பாவின் முகம் வெளி-றிப் போயிற்று. பேச்சு வரவில்லை. மனம் அதிர்ந்து கொண்டிருந்தது "யாரம்மா அது..உன் மாமனாருக்கு பெண் சகோதரங்கள்தானே இருக்கிறாங்க.."

"இது என் மாமனாரின் பெரியப்பாவுடைய மகனாம். மனைவி இல்லை. பிள்ளைக எல்லோருமே வெளி நாட்டில இருக்கிறதால... எங்க வீட்டில வந்திருக்கிறார். எனக்கு அங்க இருக்கவே பிடிக்கல...

"நீ..நீ..தப்பாப் புரிஞ்சிட்டியோன்னு நினைக்கிறேம்மா...மகளா நினைச்சி கொஞ்சம் உரிமை எடுத்திருக்கலாமில்லையா?....

" நானும் முதல்ல.. அப்படித்தாம்ப்பா நினைச்சன். காப்பி கொடுக்கும்போது கையைத் தடவிக்கொண்டே வாங்குறது....கிச்சன்ல வேலை செய்யும்போது சத்தமே இல்லாம பின்னால வந்து ஒட்டியபடி நிக்கிறது..அவர் பார்க்கிற பார்வையே சரி இல்ல.. எப்படிப்பா மருமகளோட இப்படித் தப்புத் தப்பா நடக்க மனம் வருது.. சே..."

அப்பா ஏனோ தலை நிமிரவே இல்லை.. நறுமணப் பூக்களிலிருந்து வந்த இனிய மணமும், இளந்தென்றலும் அவரை மகிழ்ச்சிப்படுத்தவில்லை. உடலெங்கும் வியர்த்துக் கொட்ட இருண்டு போன முகத்துடன் மகள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அருமையான ஒரே மகளுடைய வாழ்வில் இப்படியொரு சோதனையா...

"எல்லாத்துக்கும் மேல ஒரு நாள் வீட்டில் யாருமே இல்ல.. நான் குளிக்கிறதுக்காக டவலையும், உடுப்பையும் பாத்ரூம் கதவில போட்டுட்டு கிச்சனுக்குப் போயிட்டு வர்றன்... சாவித் துவாரம் வழியா உள்ள பாத்திட்டிருக்காம்ப்பா.. அப்பதான் இந்த ஆள் தப்பான ஆளுன்னு முடிவு பண்ணினன்.

"நா...நா..உடனே போய்க் கேட்கிறேம்மா...இப்படியே விடக்கூடாது.."அப்பா தளர்ந்து போய்க் கேட்டார்.

"வேணாம்ப்பா..... இந்த விசயம் யாருக்குமே தெரிய வேணாம். அண்ணாவுக்குத் தெரிந்தால் நார் நாராய்க் கிழித்து விடுவான். உங்க மன-சோட வைச்சிக்குங்க அப்பா... மருமகள்னா... மகள்தானே.. எப்பிடிப்பா... எப்பிடி... இந்த வயசில புத்தி குறுக்க போகுது... உங்க கால் தூசிக்கு யாருமே வர மாட்டாங்க அப்பா. அண்ணி ரொம்பவே குடுத்து வைச்சவங்க... முகத்தைத் துடைத்துக் கொண்டு மகள் எழுந்தாள். எழவோ ஆறுதல் சொல்லவோ முடியா-மல் அப்பா திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

குடும்ப உறவுகளையே நம்ப முடியாத மோசமான காலம் இது. படித்த, கண்ணியமான மனிதர்கள்கூட ஒரேயொரு வினாடியில் தங்களை மறந்து, புத்தியை இழந்து காமம் என்ற சாக்கடைக்குள் விழுந்து மூழ்கிப் போய் விடுகின்றனர். வயதான பெரியோர்களே வாலிபத்தைத் தேடி அலைவதுதான் பெரிய வெட்கக் கேடு. இதில் குடும்ப உறவுகளையே சிலர் கொச்சைப்படுத்தி நடக்க முற்படுவதுதான் மிகவும் கேவலமான, வருத்தப்பட வேண்டிய விசயம்.

அப்பாவுக்குக் கையசைத்து விடை கொடுத்து விட்டு பஸ்ஸினுள்ளே இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்த மகளுக்கு தாங்க முடியாத துக்கத்தில் தொண்டை அடைத்தது. "என்னை மன்னிச்சிடுங்க அப்பா...நீங்க பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையும் குடும்பமும் ரொம்பவே உயர்வானவங்க. ஆனால்... நான் சொன்ன கதை.. நம்ம வீட்டுக் கதையப்பா...

கொஞ்ச நாளாவே நீங்க அண்ணியோட நடந்துக்கிற முறை யும். அவங்களைப் பார்க்கிற பார்வையும் சரியில்ல... ரொம்பத் தப்பாவே இருக்கு. நீங்க மிகவும் நல்லவரப்பா... இளமையிலேயே அம்மாவைப் பறிகொடுத்து விட்டு எங்களுக்காகவே வாழ்ந்தவர். ஊருக்குள் உங்களுக்கென்று நல்ல பெயரும் கௌரவ-மும் இருக்கு. மனசிலயும் ஒழுக்கத்திலயும் கள்ளம் இல்லாதவர். அப்படிப்பட்ட என்னுடைய அப்பாவா... இப்படி... அண்ணி உங்களைக் கண்டாலே பயந்து சாகிறாங்க. அவங்க குளிக்கும்போது நீங்க சாவித் துவாரம் வழியாக உற்றுப் பார்த்த கேவலத்தை நான் பார்த்திட்டேம்ப்பா.. .என்னால நம்பவோ, இந்த அதிர்ச்சியைத் தாங்கவோ முடியல.. கதைக-ளிலயும் பேப்பரிலயும் படித்த அசிங்கங்கள் நம்ம வீட்டில நடக்கும்னு கனவிலகூட நினைச்சதில்ல.

அண்ணா அறிந்தால் உங்களைக் குப்பை மேட்டிலே வீசி விடுவான். வயதான காலத்தில தனியாகக் கிடந்து, கவனிக்கவும் ஆளில்லாம சீரழிஞ்சி போயிருவீங்க. ஏன் உங்க புத்தி இப்படி மாறினதோ புரியலப்பா... சே.. அண்ணி உங்க அருமை மகனோட மனைவி என்பது எப்படிப்பா உங்களுக்கு மறந்து போச்சி?.... நீங்கள் நல்லவரப்பா. மலை தேய லாம். ஆனால் தடுமா-றவோ சாயவோ கூடாது. அப்படி நடந்தால் அது அழிவுக்குத்தான். உங்களையும் நம்ம குடும்ப கௌரவம், மானம், மரியாதை எல்லாவற்றையும் காப்பாற்றவும், நீங்க உங்களோட பாதையை மறந்து திசை மாறிப் போனதை ஞாபகப்படுத்தவும் அதே சமயம் என்னோட புகுந்த வீட்டுக்கும் இழுக்கு வராத வகையில் இல்லாத ஒரு மாமா உறவை உருவாக்கி அண்ணிக்கு நீங்க செய்ற பாவ காரியங்கள் எல்லாம் எனக்கு நடந்ததாகப் பொய் சொன்னேன். எனக்கு வேற வழி தெரியலப்பா.

இப்ப உங்கட மனசில இருக்கிறதெல்லாம் என்னைப் பற்றிய கவலைதான்... நீங்க செய்த பாவந்தான் உங்கட செல்லப் பெண்ணின் வாழ்வைச் சீரழிக்கிறதோ? என்ற அச்சமும் கவலையுந்தான் நிறைஞ்சிருக்கு. அந்த மன உறுத்தல் இனிமேல் உங்களைத் தப்புச் செய்ய விடாது. நேற்று நற்கருணை ஆலயத்தில நீங்க தனிமையில மண்டியிட்டு கைகளை விரித்து கண்ணீர் விட்டு அழுததை நான் பார்த்தேன்ப்பா. அந்த நிமிசமே என் பழைய அப்பா எனக்குக் கிடைச்சிட்டார் என்ற சந்தோசமும் நம்பிக்கையும் வந்து மனம் நிறைஞ்சிட்டேன். காலப்போக்கில் நீங்க நடக்கிற முறைகளைப் பார்த்து "நா-மதான் மாமாவைத் தப்பாப் புரிஞ்சிட்டமோ...? " என்று அண்ணியே யோசிப்பாள். அடுத்த முறை நான் வரும்போது எந்தக் கபடுகளும் நம்ம குடும்பத்தில இருக்காது என்ற நம்பிக்கையோடயும் நிறைவோடயும் போறேம்ப்பா".. பொங்கி வந்த அழுகையை அடக்கியபடி அந்த அன்பு மகள் தன் அப்பாவின் ஆன்மாவையும் மரியாதையையும், குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றிய திருப்தியில் தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

எஸ்.ஞானேஸ்வரி

## திருமண ஆயத்த வகுப்புக்கள்



இம்மாதம் திருமண ஆயத்த வகுப்புக்கள் மே 27ம், 28ம் திகதிகளில் அகவொளி நிலையத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

---

விண்ணக வாழ்வின்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 - 12 - 1937 | | 26 - 04 - 2017 |



அமரர்

**யோசவ் இம்மானுவேல்**

*நான் உம் சந்நிதியில் எரியும் விளக்காவேன்*

நீங்கா நினைவுடன்
சகோதரர்கள், பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள், மருமக்கள்

சில்லாலை AD/38

---

## பிரான்சிஸ்கன் மறைபரப்பு அருட்சகோதரர்கள் துறவற சபை

சீ.எம்.எஸ்.எப்

இளைஞர்களே!!!

பிரான்சிஸ்கன் மறைபரப்பு துறவற சபை

**அருட்சகோதரர்கள், உலகெங்கும் பணிபுரிய உங்களை அழைக்கின்றார்கள். மேலதிக விபரங்களுக்கு, கீழ்காணும் இலக்கத்துடனோ அன்றேல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்**

தொ.பேசி.எண்.066 222 3032

அருட்சகோதரர். ஞா.மாரியநாதன்
பு.பி.ம.ச
தேவ அழைத்தல் ஊக்குவிப்பாளர்
நாடு முழுவதற்கும்.
பிரான்சிஸ்கன் மறைபரப்பு அருட்சகோதரர்கள்.

இல.116, விஹாரை வீதி
மாத்தளை-21000

---

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். (AD/20/32)

---

## விண்ணக வாழ்வில் 31ம் நாள் நினைவஞ்சலி

'இரக்கமுடையோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்'



**யோசப் அக்னஸ்**
**(டொக்கம்மா)**
அன்னை மடியில்:
15.07.1928
ஆண்டவன் அழைப்பில்
06.04.2017

இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம்"
ஆகவே நீ எனக்கே சொந்தம். (எசாயா 43:1)

அம்மா! எம் ஆருயிர்த் தாயே! எமைவிட்டு நீர் பிரிந்து
மாதம் ஒன்று கடந்ததை நம்பமுடியாமல் -
தவியாய் தவிக்கின்றோம்...
இளவயதில் தந்தையை இழந்து நாம் தவித்தபோது
மெழுகாய் உருகி நின்றாய் - பிள்ளைகள் எம் வாழ்வுக்காய்
பாசமுள்ள தாயாக, வழிகாட்டும் தந்தையாக, நல் நண்பனாக
மருத்துவனாக, அனைத்து உறவுகளுமாய் - அனைத்துமே
நீயாகி, தனித்து நின்று எமைத் தாங்கி உயரவைத்தாய்...
இல்லையென வந்தவரை இரக்கமுடன் அரவணைத்து
பசியுடன் வந்தவரை பாசமுடன் வரவேற்று
வயிறார உணவளித்து உதவுவதே -
உம் பணியாய் கொண்டிருந்த உத்தமியே!
நெஞ்சம் நெகிழ்கின்றது - உம் இரக்கம் நினைக்கையிலே...
கடல் கடந்து வாழும் உம் பிள்ளைகளுடன் மகிழ்ந்து
திருமறையின் திருத்தலங்களை தரிசித்து
இதயத்தில் அணையாத பெருமகிழ்வின் ஒளிபெற்றாய்...
உம் பிரிவின் வேதனையை தாங்கும் சக்தியின்றி
துன்பக்கடலில் கதிகலங்கி வாழ்கின்றோம்
ஆனாலும் தாயே - எம் வாழ்வு உள்ளவரை
உம் நினைவு எமைவிட்டு விலகாதம்மா
இறைபதமதில் நீங்கள் என்றும் மகிழ்ந்திருக்க
அனுதினம் வேண்டுகின்றோம் இறையவனை அம்மா!

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"அன்னை இல்லம்"
புலோப்பளை கிழக்கு,
பளை.

(AD/42 2017)

---

## விண்ணக வாழ்வின் 1 ம் ஆண்டு நினைவாக

| அன்னை மடியில் | | ஆண்டவன் சந்நிதியில் |
|---|---|---|
| 12 . 01 . 1950 | | 02 . 05 . 2016 |



AD37

## அமரர் பெனடிக்ற் செபஸ்ரியாம்பிள்ளை

**" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் "**

அப்பா ! அப்பா ! எங்கே நீங்கள் ? காணவில்லையே !
தேடுகின்றோம் கண்கள் இரண்டும் தூங்கவில்லையே !
இமை நடுவே உங்கள் நினைவு குடியிருக்குதே !
இதயமெல்லாம் உங்கள் வார்த்தை வழி நடத்துதே !
ஆலமரம் போல நீங்கள்
நிழலில் நாங்கள் தூங்கினோம்
எமை சுமந்த உறவு ஒன்றாய் வானத்தில் பறந்தோம் !
சிறகொடிந்த பறவையாக துடிதுடிக்கின்றோம்
நாம் வாழுகின்ற வழிகள் எல்லாம் நீரமைத்ததே
பாறை போலே உந்தன் நினைவுகள் !
படைத்த பரமன் பதம் என்றும் நீங்கள்
மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.

- சில்லாலை
பண்டத்தரிப்பு -

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

## விண்ணக வாழ்வின்

| முதலாம் வருட நினைவஞ்சலி | பதினேழு மாத நினைவஞ்சலி |
|---|---|
| மனுவேற்பிள்ளை யேசுரட்ணம் | யேசுரட்ணம் மாக்கிறேற் |
| தோற்றம் - 1932.08.04 | தோற்றம் - 1938.06.11 |
| மறைவு - 2016.05.11 | மறைவு - 2015.12.31 |





**" என்னில் விசுவாசம் கொள்பவனுக்கு வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவதில்லை "**

*காலங்கள் கடந்து போனாலும் கணப்பொழுதும்*
*எம் நெஞ்சை விட்டு நீங்காத பப்பாவே எங்கள் அப்பாவே*
*நீங்கள் எங்களைத் தாங்கிய காலங்களும் உங்களைத் தாங்க கடவுள்*
*எமக்கு ஈய்ந்த சில மாதங்களும் மாறாத தடங்கள் பப்பா.*
*உங்களுக்குக் கல்லறை வைத்து வருடங்கள் கடந்தாலும்*
*உன் மிடுக்கான தோற்றமும் மற்றவர்களைக் கவரும் தாராள குணமும்*
*அன்னாள் அன்னையே கதியென்ற உன் அர்ப்பணிப்பும் உங்களை*
*எங்கள் மனங்களில் வாழ வைத்துக்கொண்டே இருக்கும்*

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(AD/33-2017)

---

## 3ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 - 12 - 1935 | | 22 - 04 - 2014 |



AD34


அமரர்

**வெலிச்சோர் பிள்ளை எட்வேட்ராஜா**

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம்
ஆண்டவருக்கே உரியவர்கள்" ( உரோ.14:8)

பிரிவால் துயருறும்
மகன் லண்டன் : எ. பிறேம்குமார்
பெறாமகள் : கிறிஸ்ரீனா
மருமகன் : வசந்தன் திலகரூபி
உற்ற நண்பன் : செல்வம் ( சைக்கிள் கடை)

தபாலகந்தோர் வீதி
சாவகச்சேரி

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட அமரர் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை ஞாபகார்த்த கட்டடத்தொகுதியையும், அமர் அருட்திரு ஜோய் கிறிஸ்தோஸ்ரம் அடிகளாரின் ஞாபகார்த்த அரங்கினையும் யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த சித்திரை 27ம் திகதி காலை 10.30 மணிக்குத் திறந்து வைத்தார். கட்டடத் தொகுதியின் நிர்மாணப்பணிகளை பொறுப்புடன் மேற் கொண்ட அருட்திரு I.P.தயாபரன் அடிகளாருக்கு யாழ். ஆயரினால் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.



யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தனது 43 ஆவது குருத்துவத் திருநிலைப்படுத்தப்பட்ட நாளை 24.04.2017 அன்று நினைவுகூர்ந்தவேளை முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோர்ச் அடிகளாரும் குருக்களும் ஆயரை வாழ்த்தி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.



மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழாவில் யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த 25.04.2017 அன்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் பருத்தித்துறை, முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர்களும், மணற்காட்டுப் பங்குத்தந்தையும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.



யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த 23.04.2017 அன்று மாலை வளலாய் மருதமடு அன்னை ஆலய மக்களை நேரில் தரிசித்து, அவர்களது மீள் குடியமர்வின் பின்னரான இந்நாட்களின் கஸ்ட துன்பங்களைக் கேட்டறிந்துகொண்டார். அவர்களது சுமுகமான வாழ்வாதார மேம்பாட்டிற்கான உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிப்பதாக உறுதியளித்தார்.

### மற்றவர்களுக்காக நாங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவராக போலந்து நாட்டுப் புனிதை பவுஸ்தினா விளங்குகின்றார். இவர், "ஆண்டவரே நான் உம்மை நம்பு கின்றேன் "என்று வாக்குக் கொடுத் தது மட்டுமன்று, அந்த ஆண்டவரை இரக்கத்தின் ஆண்டவராக உணர்ந்து, அவரது இரக்கத்தை நாமும் அனுபவிக்க வேண்டும் எனவிரும்பி இறை இரக்கத்தின் பக்தியை உல கெங்கும் பறைசாற்றினார்.

புனித றீற்றம்மாளும் தமது வாழ்வில் இயேசுவை அனுபவிக்க வேண்டும் சந்திக்கவேண்டும் என்பதற்காக சந் தித்த துன்பங்கள், தடைகள் ஏராள-மானவை. எமது வாழ்விலும் நாம் பலதிட்டங்களை செயல்களை செய்ய முற்படும் போது ஏற்படும் தடைகள், துன்பங்கள், தோல்விகள், ஏமாற் றங்கள் என்பன இயேசுவை நாம் சந் திக்கவேண்டும் என்பதற்காகவே நிகழ் கின்றன என்பதை உணர மறுக் கின்றோம்.

ஆனால் அதுவே இயேசு எம்மைச் சந்திக்கும் சந்தர்ப்பம் என்பதைக் கண்டு கொள்ள வேண்டும். அதை மற்றவர்களோடு பகிரவேண்டும் என குரு முதல்வர் தமது மறையுரையில் குறிப்பிட்டார்.

### பாஸ்கா விழா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான சமாதானம் என்பது நீதியிலிருந்து வெளிப்படுவதாகும். எம் நாட்டு மக்கள் நீதியையும், உண்மையையும் நிலைநாட்ட சரி யான வழிகளைத் தேடுகின்ற இந்த நேரத்திலே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம். எம் தாய்நாட்டின் ஒற்று மையையும், ஒப்புரவையும் மக்கள் மத்தியில் வலுவடையச் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

நாம் ஒருவர் மற்றவரை மதித்து, எம் மத்தியில் காணப்படும் அற்ப வேறு-பாடுகளைத் தவிர்த்து, மற்றவர்க ளுடைய மனிதாபிமானத்தைப் பாதுகாத்து மதிப்பளிக்கின்ற பொழுது தான் இவற்றைச் செய்ய முடியும். எனவே இப்பாஸ்கா விழாவிலே எமது நாட்டுக்கும், நாட்டு மக்களுக் கும் அமைதியையும், நீதியை யும் கேட்டு மன்றாடுவோம்.

## அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் வாழ்வாதார உதவிகள்



அருட்தந்தை சரத்ஜீவன் நிதியத்தினால் அச்சுவேலியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக ரூபா. 45,000 பெறுமதியில் பசுமாடும் வளலாயைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளவரின் குடும்பத்திற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட ரூபா. 65,000 பெறுமதியில் மோட்டார் வாகனம் ஒன்றும் இயக்குநர் அருட்தந்தை கி. ஜோ. ஜெயக்குமார் அடிகளாரால் 18-03-2017 அன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதற்கான நிதி உதவிகள் லண்டனில் வசிக்கும் புஷ்பராஜா இரெட்னக்குமாரி, அகல்யா மற்றும் பிரசாந்த் ஆகியோரால் வழங்கப்பட்டுள்ளது.



பெரிய விளான் - பண்டத்தரிப்பு, சில்லாலைப் பங்குகள் இணைந்து நடாத்திய பெரிய சிலுவைப்பாதை தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் நடைபெற்றது. இச் சிலுவைப்பாதை பெரியவிளானில் ஆரம்பித்து பண்டத்தரிப்பு ஊடாக தூய யோசவ் வாஸ் திருத்தலத்தை வந்தடைந்தது.